# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

**முன்னிலை**: திருமதி. ப.கனிமொழி, எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ம் தேதி, செவ்வாய்கிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆவணி மாதம் 15 ஆம் நாள்
STC No.45/2016
(CNR No: TNAL070001462016)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>ஜெயங்கொண்டம் காவல் நிலையம்,<br>குற்ற எண்: 646/2015. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரி | : | வேல்முருகன் (34/2026), த/பெ.சுப்புராயன்,<br>தெற்குவெளி, இலையூர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 279, 338 ன் கீழ் | | |
| 2 | சம்பவம் நடந்த நாள் | : | 10.11.2015 | | |
| 3 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | : | 14.11.2015 | | |
| 4 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற நாள் | : | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | |
| | | | கைது இல்லை | முன்பிணை–31.12.2020 | |
| 5 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 04.01.2016 | | |
| 6 | கு.வி.மு.ச பிரிவு 240(1)ன் கீழ் குற்றத்தின் சாராம்சம் விளக்கி வினவப்பட்ட நாள் | : | 25.01.2017 | | |
| 7 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 11.02.2019 | 11.02.2019 |
| | | | அ.சா.2 | 11.02.2019 | 03.07.2026 |
| | | | அ.சா.3 | 11.02.2019 | 03.07.2026 |
| | | | அ.சா.4 | 11.02.2019 | 11.02.2019 |
| | | | அ.சா.5 | 22.02.2023 | 22.02.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அ.சா.6 | 17.04.2023 | 17.04.2023 |
| | | | அ.சா.7 | 27.07.2026 | 27.07.2026 |
| 8 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | : | 03.08.2026 | | |

இவ்வழக்கு 12.04.2018 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 01.09.2026 ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி.C.இராஜேஸ்வரி அவர்கள் முன்னிலையாகிவும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.சின்னசாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

1. கடந்த 10.11.2015 ம் தேதி மாலை 16.00 மணிக்கு வாரியங்காவல் செல்வராஜ் வீட்டின் முன்பு புகார்தாரரின் மருமகன் TN 61 F 4525 என்ற Honda Shine என்ற வாகனத்தில் பின்னால் சாட்சி–3 ஐ உட்கார வைத்துக்கொண்டு ஜெயங்கொண்டத்திலிருந்து செந்துறை செல்லும் மெயின்ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி இடதுபுறமாக சென்றபோது எதிரில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து புகார்தாரரின் மருமகன் ஓட்டி வந்த வாகனத்தில் மோதியதில் சாட்சி–3 க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ள எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவுகள் 279, 338 ன் கீழும் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 338 ன் படி வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், கு.வி.மு.ச பிரிவு 207ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலணை செய்ததின் பேரில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 279, 338ன் கீழான குற்றத்தின் சாராம்சம் குறித்து, விளக்கி வினவ எதிரி குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்க விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:–**

**6**. அ.சா.1 கலியபெருமாள் தனது சாட்சியத்தில் சுமார் 4 வகுடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 4.00 மணியளவில் தன் மருமகன் தேவதாசனம் தன் பேரனும் மோட்டார் சைக்கிளில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கண்டியங்கொல்லை மெயின்ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது மணியார் வீடு அருகே எதிரே வந்த ஒரு இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், அதில் தன் மருமகனுக்கு காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், தன் பேரனுக்கு வலது கால் எலும்பு முறிந்துவிட்டது என்றும், சந்திரகாசு என்பவர் தனக்கு போன் மூலம் தகவல் சொன்னார் என்றும், அடிபட்ட இருவரும் திருச்சி கே.எம்.சி தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார்கள் என்றும், தான் அங்கு சென்று பார்த்தேன் என்றும், ஜெயங்கொண்டம் போலீசார் மருத்துவமனைக்கு வந்து தன் மருமகன் அடிபட்டதில் பேசமுடியாமல் இருந்ததால் தன்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், தன் மருமகன் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணோ மோதிய வாகனத்தின் பதிவு எண்ணோ தனக்கு ஞாபகம் இல்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்ததுதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் அ.த.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

7.அ.சா.2 தேவதாசன் தனது சாட்சியத்தில், கடந்த 10.11.2015ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் தனக்கு சொந்தமான டிஎன் 61 இ 4585 என்ற ஹோண்டா சைன் என்ற இருசக்கர வாகனத்தை தான் ஓட்ட தன் மகன் ஆனந்தகுமார் பின்னால் அமர்ந்து வர வாரியங்காவலிருந்து ஜெயங்கொண்டம் செல்வதற்காக இருந்து வடக்கில் தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது வாரியங்காவல் விஏஓ செல்வதுரை வீடு அருகே வந்தபோது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி டிஎன் 61 இ 4613 என்ற பஜாஜ் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் சாலையின் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்த தங்கள் வண்டி மீது திடீரென்று தங்கள் பக்கமாக சாலையில் ஏறிவந்து மோதி விபத்து ஏற்படுத்திவிட்டது என்றும், எதிரே வந்த வாகனம் அதிவேகமாக வந்து மோதியதில் தனக்கு வலது கால் முட்டிக்கு கீழே ரத்த காயம் ஏற்பட்டது என்றும், தன் மகனுக்கு வலது முட்டிக்கு கீழே எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது என்றும், தங்கள் மீது மோதி அந்த இரு சக்கர வாகனம் கட்டுபாட்டை இழந்து கீழே விழுந்துவிட்டது என்றும், அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு எங்கு அடிபட்டது என்று தான் பார்க்கவில்லை என்றும், அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபரை தான் பார்த்தேன் என்றும், அவரை மீண்டும் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.3 ஆனந்தகுமார் தனது சாட்சியத்தில், 10.11.2015ம் தேதி மாலை 4.00 மணியளவில் வாரியங்காவலில் இருந்து ஜெயங்கொண்டம் செல்வதற்காக டிஎன் 61 இ 4585 என்ற ஹோண்டா சைன் என்ற இருசக்கர வாகனத்தில் தன் அப்பா தேவதாசன் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து கொண்டு வி.ஏ.ஓ. செல்வதுரை வீடு அருகே சாலையின் இடது புறமாக தாங்கள் சென்று கொண்டிருந்தபோது எதிர் திசையில் டிஎன் 61 இ 4613 என்ற பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தை ஓட்டி வந்த நபர் அதிவேகமாக கட்டுபாடு இல்லாமல் வந்து தாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது என்றும், தன் அப்பாவிற்கு வலது காலில் முழங்காலுக்கு கீழ் காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், தனக்கு வலது கால் முட்டிக்கு கீழும் பாதத்திலும் அடிபட்டு முழங்காலுக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது என்றும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபரை தனக்கு தற்போது ஞாபகம் இல்லை என்றும், அடிபட்ட தாங்கள் இருவரும் திருச்சியில் உள்ள கேஎம்சி காவேரி தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம் சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.4 சந்திரகாசன் தனது சாட்சியத்தில் சுமார் மூன்றரை வருடங்களுக்கு முன்பு மாலை 4.00 மணியளவில் செங்குந்தபுரம் செல்வதற்காக தனக்கு சொந்தமாக இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது மணியார் செல்வதுரை வீட்டிற்கும் சிமெண்ட் பேக்டரிக்கும் இடையில் அ.சா.2 ம் அ.சா.3 ம் ஹோண்டா இருச்சக்கர வாகனத்தில் அ.சா.2 ஓட்ட அ.சா.3 பின்னால் அமர்ந்து வந்து கொண்டிருந்தார்கள் என்றும், தான் சென்றுகொண்டிருந்தபோது தன்னை தாண்டி அ.சா.2 ம் அ.சா.3 ம் முன்னால் போனார்கள் என்றும், அப்போது எதிரே பெரிய இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் அதிவேகமாக தெற்கில் இருந்து வந்து கட்டுபாடு இல்லாமல் அ.சா.2, 3 சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டது என்றும், அ.சா.3 க்கு வலது காலில் பலத்த அடிபட்டுவிட்டது என்றும், எதிரே வந்த விபத்தை ஏற்படுத்திய வாகனத்தில் வந்த நபர் கீழே விழுந்துவிட்டார் என்றும், அடிபட்ட அ.சா.2, 3 இருவரையும் டாடா சுமோ மூலம் திருச்சியில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும், அ.சா.2, 3 வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தனக்கு தெரியாது என்றும், மோதிய இருச்சக்கர வாகனத்தின் பதிவு எண்ணும் தனக்கு தெரியாது என்றும், ஓட்டிய நபரை அன்று தான் பார்த்தேன் என்றும், ஆனால் தற்போது சக்கரை நோயினால் கண் பார்வை மங்கிவிட்டதனால் தற்போது எதிரியை பார்த்தால் தன்னால் சரியாக அடையாளம் காட்ட முடியாது என்று சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.5 முருகேசன் தனது சாட்சியத்தில் சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தங்கள் ஊரில் விபத்து நடந்தது சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, வரைபடம் வரைந்து, கையெழுத்து கேட்டதாகவும், தான் போட்டுக்கொடுத்தேன் என்றும், தன்னுடன் அருள் கண்ணன் என்பவரும் கையெழுத்து செய்து கொடுத்தார் என்றும், பார்வை மகசரில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்.

11. அ.சா.6 அருள்கண்ணன் தனது சாட்சியத்தில் சுமார் 4, 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தங்கள் ஊரைச் சேரந்த கலியபெருமாளுக்கு விபத்து ஏற்பட்டது தொடர்பாக போலீசார் சம்பவ இடம் இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது வேறு எதுவும் தனக்கு தெரியாது என சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.7 தமிழரசன் தனது சாட்சியத்தில், கடந்த 14.11.2015 ம் தேதி தான் ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலனைப்பெற்று, திருச்சி காவேரி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த தேவதாசன் என்பவர் பேச முடியாத நிலையில் இருந்ததால், அவருக்கு துணையாக இருந்த அவரது மாமனார் கலியபெருமாள் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலைய குற்ற எண் 646/2015, ச/பி.279, 337 இதசவின்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 பதிவு செய்தேன் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருள்கண்ணன், முருகேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.த.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 தயார் செய்தேன் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில், குற்ற சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடியபோது, 17.11.2015 ம் தேதி கைது செய்து, நிலையம் கொண்டு வந்து, காவல் நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், ஆனந்தகுமார் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.சிவமணி என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிந்து, அவர் கொடுத்த காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.5 பெற்றேன் என்றும், மருத்துவர் ஆனந்தகுமார் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் இவ்வழக்கின் ச/பி.279, 337 இதசவிலிருந்து ச/பி.279, 338 ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.த.சா.ஆ.6 தயார் செய்துள்ளேன் என்றும், இவ்விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 61 E 4585 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா சைன் இருசக்கர வாகனத்தை 16.12.2015 ம் தேதியும், மற்றொரு வாகனமான TN 61 E 4613 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தை 17.12.2015 ம் தேதி மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சரவணபவன் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பெற்று, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.த.சா.ஆ.7 மற்றும் அ.த.சா–ஆ.8 பெற்றேன் என்றும், பின்னர் எதிரி மீதான

விசாரணையை முடித்து, 31.12.2015ம் தேதி எதிரியின் மீது ச/பி.279, 338 இதசவின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சிமளித்துள்ளார்.

13. எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிக்குப் பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

14. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலணை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 279, 338ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

15. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

## தீர்வு

16. அரசு தரப்பில், கடந்த 10.11.2015ம் தேதி மாலை 16.00 மணிக்கு வாரியங்காவல் செல்வராஜ் வீட்டின் முன்பு அ.சா.2, அ.சா.3ஐ வாகனத்தில் பின்னால் உட்கார வைத்துக்கொண்டு ஜெயங்கொண்டத்திலிருந்து செந்துறை செல்லும் மெயின்ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி இடதுபுறமாக சென்றபோது எதிரில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அ.சா.2ன் வாகனத்தில் மோதியதில் அ.சா.3க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாக எதிரி மீது இந்த வழக்கானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

17. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

18. இந்த வழக்கு விபத்தானது கடந்த 10.11.2015ம் தேதி மாலை 16.00 மணிக்கு நடந்தது என்பது குறித்தும், அந்த விபத்தானது ஜெயங்கொண்டத்திலிருந்து செந்துறை செல்லும் மெயின்ரோட்டில் வாரியங்காவல் செல்வராஜ் வீட்டு முன்பு நடந்துள்ளது என்பது குறித்தும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும். அ.த.சா.ஆ.7

மற்றும் அ.த.சா.ஆ.8 ஆக மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பரிசீலனை செய்கையில், TN 61 E 4613 என்ற Bajaj Discover இருசக்கர வாகனமும் TN 61 E 4585 என்ற பதிவெண் கொண்ட Honda Shine என்ற இருசக்கர வாகனமும் ஒன்றுக்கொன்று மோதி விபத்துக்குள்ளானது என்பது புலப்படுகிறது. மேலும், இந்த வழக்கு விபத்தில் அ.சா.3 ஆனந்தகுமார் என்பவருக்கு வலது கால் முழங்காலுக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்பதும், பாதத்தில் அடிபட்டுள்ளது என்பதும் அ.த.சா.ஆ.5 ஆன காயச்சான்றின் மூலமாக இந்த வழக்கு விபத்தானது வாகன இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்பது குறித்தும், இந்த வழக்கு விபத்தில் அ.சா.3 ஆனந்தகுமாருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பது குறித்தும் எதிரி தரப்பில் மறுத்தளிக்கப்படவில்லை. எதிரி தரப்பில் விபத்து நடந்த விதம் குறித்தும், எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையையும் பற்றி மட்டுமே மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

19. மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை நிரூபிக்கம் விதத்தில் அரசு தரப்பில் புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 ஆகவும், பார்வை மகசர் அ.த.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆகவும், காயச்சான்று அ.த.சா.ஆ.5 ஆகவும், சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.த.சா.ஆ.7 மற்றும் அ.த.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

20. எனவே, இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது இந்த வழக்கு விபத்தானது எதிரியின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்பட்டதா என்பதையாகும். அதுகுறித்து, இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், இந்த வழக்கு விபத்து நடந்த சாலையானது தென்வடல் சாலையாகும். அந்த சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த அ.சா.2 தேவதாசன் சாலை விதிகளின் படி சாலையின் கீழ்புறமாகவும், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்ற எதிரியானவர் சாலை விதிகளின் படி மேல்புறமாகவும் செல்லவேண்டும். அ.த.சா.ஆ.4 ஆன வரைபடத்தினை பார்க்கும்பொழுது விபத்தானது சாலையின் கீழ்புற ஓரமாக நடந்துள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே, அ.சா.2 சாலை விதிகளின் படி சரியான திசையிலேயே சென்றுள்ளார் என்பதும், எதிரியானவர்

மேல்புறமாக செல்லவேண்டியவர் கவனக்குறைவாக கீழ்புறமாக சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது புலப்படுகிறது.

21. அ.சா.1 ஆன கலியபெருமாள் தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று மாலை 04.00 மணியளவில் தனது மருமகன் தேவதாசன் என்பரும், தன் பேரனும் மோட்டார் சைக்கிளில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கண்டியங்கொல்லை மெயின்ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது மணியார் வீடு அருகே எதிரே வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், அதில் தன் மருமகனுக்கு காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், தனது பேரனுக்கு வலது காலில் எலும்பு முறிந்துவிட்டதாகவும் சந்திரகாசு என்பவர் தனக்கு போன் செய்து தகவல் கூறியதாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அ.சா.1 வழக்கு விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது தெரிய வருகிறது.

22. இந்த வழக்கு விபத்தினை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 தேவதாசன் தனது சாட்சியத்தில் கடந்த 10.11.2015 ம் தேதி மாலை 04.00 மணியளவில் தனக்கு சொந்தமான TN 61 E 4585 Honda Shine என்ற இருசக்கர வாகனத்தை தான் ஓட்ட தனது மகன் ஆனந்தகுமார் பின்னால் அமர்ந்து வர வாரியங்காவலிலிருந்து ஜெயங்கொண்டம் செல்வதற்காக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது வாரியங்காவல் விஏஓ செல்வதுரை வீடு அருகே வந்தபோது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த TN 61 E 4613 என்ற பஜாஜ் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் சாலையின் இடதுபுற ஓரமாக சென்று கொண்டிருந்த தங்கள் வண்டி மீது திடீரென்று தங்கள் பக்கமாக சாலையில் ஏறிவந்து மோதி விபத்து ஏற்படுத்திவிட்டது என்றும், எதிரே வந்த வாகனம் அதிவேகமாக வந்து மோதியதில் தனக்கு வலது கால் முட்டிக்கு கீழே இரத்தகாயம் ஏற்பட்டதாகவும், தனது மகனுக்கு வலது கால் முட்டிக்கு கீழே எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது என்றும், தங்கள் மீது மோதி அந்த இருசக்கர வாகனம் கட்டுப்பாட்டை இழந்து கீழே விழுந்துவிட்டது என்றும், அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி என்றும் சாட்சியமளித்துள்ளார்.

23. இந்த வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 10.11.2015 ம் தேதி மாலை 04.00 மணியளவில் வாரியங்காவலிலிருந்து

ஜெயங்கொண்டம் செல்வதற்காக TN 61 E 4585 என்ற Honda Shine என்ற இருசக்கர வாகனத்தில் தன் அப்பா தேவதாசன் ஓட்ட தன் பின்னால் அமர்ந்துகொண்டு விஏஓ செல்வதுரை வீடு அருகே சாலையின் இடதுபுறமாக தாங்கள் சென்றுக்கொண்டிருந்தபோது எதிர் திசையில் TN 61 E 4613 என்ற Bajaj Discover வாகனத்தை ஓட்டி வந்த நபர் அதிவேகமாக கட்டுப்பாடு இல்லாமல் வந்து தாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது என்றும், அதில் தன் அப்பாவிற்கு வலது காலில் முழங்காலுக்கு கீழ் காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், தனக்கு வலது கால் முட்டிக்கு கீழும், பாதத்திலும் அடிபட்டு முழங்காலுக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

24. இந்த வழக்கினை கண்ணுற்ற சாட்சியான சந்திரகாசன் என்பவர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், சுமார் 3 ½ வருடங்களுக்கு முன்பு மாலை 04.00 மணியளவில் செங்குந்தபுரம் செல்வதற்காக தனது சொந்தமான இருசக்கர வாகனத்தல் சென்றுக்கொண்டிருந்தபோது மணியார் செல்வதுரை வீட்டிற்கும் சிமெண்ட் பேக்டரிக்கும் இடையே அ.சா.2, அ.சா.3 ம் Honda இருசக்கர வாகனத்தில் அ.சா.2 ஒட்ட அ.சா.3 பின்னால் அமர்ந்து வந்து கொண்டிருந்தார்கள் என்றும், தான் சென்றுகொண்டிருந்தபோது தன்னை தாண்டி அ.சா.2, அ.சா.3 ம் முன்னால் போனார்கள் என்றும், அப்போது எதிரே பெரிய இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் அதிவேகமாக தெற்கிலிருந்து வந்து கட்டுப்பாடு இல்லாமல் அ.சா.2, அ.சா.3 சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது என்றும், அ.சா.3 க்கு வலதுகாலில் பலத்த அடிபட்டுவிட்டது என்றும், எதிரே வந்த விபத்தை ஏற்படுத்திய வாகனத்தில் வந்த நபர் கீழே விழுந்துவிட்டார் என்றும், அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரை அன்று தான் பார்த்ததாகவும், ஆனால் தற்போது சர்க்கரை நோயினால் கண் பார்வை மங்கிவிட்டது என்றும் அதனால் தற்போது எதிரியை பார்த்தால் சரியாக அடையாளம் காட்டமுடியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 ஐ எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

25. மேலும், அ.சா.2 மற்றும் அ.சா.3 ன் முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரண்படும் வகையில் அவர்களது குறுக்கு விசாரணை சாட்சியம் அமையவில்லை. மேலும், அவர்களது முதல் விசாரணையை உறுதிபடுத்தும் வகையிலேயே அவர்களது

குறுக்கு விசாரணை சாட்சியம் உள்ளது. எனவே, அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் ஒன்றோடொன்று ஒத்திசைந்து உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அ.சா.2 முதல் அ.சா.4ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் எதிரி அதிவேகமாக சாலையின் மேல்புறமாக சென்றவர் அஜாக்கிரதையாக கீழ்புறமாக ஏறி சென்று கீழ்புறமாக வந்துகொண்டிருந்த அ.சா.2 ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியுள்ளார் என்றும், விபத்து சம்பவத்தை கண்ணுற்ற மற்றும் காயம்பட்ட சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சியங்கள் கோர்வையாகவும், நம்ப தகுந்த வகையிலும் சாட்சியமளித்துள்ளதால், அரசுதரப்பு எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

26. மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் Ravikapoor Vs State of Rajasthan 2012 (5) SC 497 **என்ற வழக்கில்** " We are unable to understand as to how the trial Court could ignore the Statement of eye witnesses, particularly when they were reliable, trust worthy and gave the most appropriate high account of the Accident. The Judgment of the trial Court, therefore suffered from error of law and in appreciation of evidence both. The interference by the high Court with the judgment of acquittal by the trial court does not suffer from any jurisdictional error". ஆகவே, கண்ணுற்ற சாட்சியங்களானது நம்பத்தகுந்ததாகவும், உண்மையாகவும் இருக்கும் நிலையில் சம்பவத்தைப் பற்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், சம்பவத்தில் கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தை தகுந்த காரணம் இன்றி நிராகரிக்கக்கூடாது என்று தெளிவுப்பட கூறியுள்ளது. எனவே, மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீரப்பு இந்த வழக்கின் பொருண்மைக்கு பொருந்தும் வகையில் அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

27. இந்த வழக்கில் பட்டியல் சாட்சி–8 ஆன மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் சாட்சியமும், அ.சா.3 க்கு சிகிச்சையளித்து காயச்சான்று வழங்கிய பட்டியல் சாட்சி–9 ஆன மருத்துவரின் சாட்சியமும் அரசுதரப்பில் விலக்களிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் மருத்துவரின் சாட்சியங்கள் அரசுதரப்பில் விலக்களிக்கப்பட்டு முடிக்கப்பட்டாலும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் காயச்சான்று குறித்து எதிரி தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் வழக்கு விசாரணையில் தெரிவிக்கப்படாததாலும் குற்றவியல் நடைமுறைச்சட்டம்

பிரிவு 294(3)ல் "Where the genuineness of any document is not disputed, such document may be read in evidence in any inquiry, trial or other proceeding under this Code without proof of the signature of the person to whom it purports to be signed." என கூறியுள்ளபடி அரசு தரப்பில் மருத்துவரை அழைத்து விசாரிக்கப்படாதது அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

28. எதிரி தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலானவர்கள் அக்கறையுடைய சாட்சிகள் என்றும் அவர்களது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்ற வாதம் வைக்கப்பட்டுள்ளது. அதுகுறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில் அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சியங்கள் ஒன்றோடொன்று ஒத்திசைந்தும், கோர்வையாகவும் நம்பக்கூடியதாகவும் உள்ள நிலையில் அவர்கள் அக்கறையுடைய சாட்சிகள் என்பதால் மட்டுமே அவர்களது சாட்சியத்தை நிராகரிக்க முடியாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

29. அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சியங்களையும், அ.த.சா.ஆ.3 ஆன பார்வை மகசர் மற்றும் அ.த.சா.ஆ.4 ஆன மாதிரி வரைபடத்தையும் ஒன்றிணைந்து பரிசீலனை செய்கையில், எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து அ.சா.2 ன் இருசக்கர வாகனத்தின் மீது மோதி அ.சா.3 க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது தெரிய வருகிறது.

30. எனவே, மனித உயிருக்கு ஆபத்து உண்டாகும் விதமாக பொதுப்பாதையில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி அ.சா.3 க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 338 ன் கீழான குற்றத்தில் குற்றவாளி என கு.வி.மு.ச பிரிவு 255(2)ன் கீழ் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

31. முடிவில், இ.த.ச பிரிவு 338 ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரி குற்றம் புரிந்த விதத்தை கருத்தில்கொண்டும், குற்றத்தன்மையை கருத்தில் கொண்டும் எதிரி நன்னடத்தை சட்டத்தின் பலனை பெற தகுதியற்றவர் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

32. முடிவில், எதிரியின் மீதான இ.த.ச பிரிவு 338 ன் கீழான குற்றத்திற்கு அபராதமாக ரூபாய் 1,000/-ம் விதித்தும், அபராதத் தொகையை கட்டத்தவறினால் ஒரு வார காலம் வெறுங்காவல் சிறைத் தண்டனை விதித்து கு.வி.மு.ச பிரிவு 255(2)ன் கீழ்

தீர்ப்பளிக்கப்படுகிறது. இ.த.ச பிரிவு 279ன் படியான குற்றமானது இ.த.ச பிரிவு 338ன் படியான குற்றத்திற்கு உள்ளடங்கிய குற்றம் என்பதால் மேற்படி இ.த.ச பிரிவு 279ன் கீழ் தண்டனை விதிக்கப்படவில்லை.

33. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

34. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01ம் நாள் செவ்வாய்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-P.Kanimozhi)
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

**<u>அட்டவணை : –</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா.1 – கலியபெருமாள்

அ.சா.2 – தேவதாசன்

அ.சா.2 – ஆனந்தகுமார்

அ.சா.4 – சந்திரகாசன்

அ.சா.5 – முருகேசன்

அ.சா.6 – அருள்கண்ணன்

அ.சா.7 – தமிழரசன், காவல் உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.த.சா.ஆ.1 – புகார் வாக்குமூலம்

அ.த.சா.ஆ.2 – முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.3 – பார்வை மகசர்

அ.த.சா.ஆ.4 – மாதிரி வரைபடம்

அ.த.சா.ஆ.5 – காயச்சான்று

அ.த.சா.ஆ.6 – சட்டப்பிரிவு மாற்று அறிக்கை

அ.த.சா.ஆ.7 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 61 E 4585)

அ.த.சா.ஆ.8 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 61 E 4613)

**அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள் :** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள் :** இல்லை

**குறிப்பு:**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்கள்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி எதிரிக்கும், காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

4. தீர்ப்பின் உண்மை நகல் மாண்புமிகு அரியலூர் மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(Sd/-P.Kanimozhi)

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**ஜெயங்கொண்டம்.**

//True Copy//

நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.